# மாலைக்கதிர்
Maalaikkathir






சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 22 செவ்வாய்க்கிழமை 04.06.2024 கதிர் 221


# அரிசிக்காக 34 லட்சம் குடும்பங்கள் வரிசையில் காக்கும் நிலை! இந்தப் பயணத்தை இப்படியே தொடர விடப் போகின்றோமா?

## நாம் இதனை இதை மாற்றிக் காட்டுவோம் என்கிறார் அனுர குமார




ஒவ்வொரு துறையிலும் புதிய மாற்றத்திற்கான சவால்களை எதிர்கொள்ளத்தக்க எதற்கும் மண்டியிடாத ஒரு தலைமை இந்த நாட்டிற்கு வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர திசாநாயக்க தெரிவித்தார். தேசிய மக்கள் சக்தியின் பொறியியலாளர்களின் தொழிற்சங்க தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், “உலகளவில் உருவாகியுள்ள புதிய தொழில்நுட்பத்தின் மாற்றங்களை உள்வாங்குவதில் நாம் வெற்றி பெற்றோமா என்ற கேள்வியை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம். தொழில்துறை புரட்சிகளில் இருந்து தோன்றிய பொறியியல் அறிவு, தொழில்நுட்ப அறிவு மற்றும் பொருளாதார மாற்றம் ஆகியவை வளர்ச்சியை அடைய வெற்றி பெற்ற நாடுகளுக்கு ஒரு பெரிய பாய்ச்சலாக மாறியது.

இதன் விளைவாக, வியட்நாம் 433 பில்லியன் டொலர் பொருளாதாரத்தை உருவாக்க முடிந்தது, தென் கொரியா 1.7 டிரில்லியன் டொலர் பொருளாதாரத்தை உருவாக்கும் திறனை பெற்றது. பங்களாதேஷ் நாட்டின் பொருளாதாரம் 459 பில்லியன் டொலர்களாக வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால், இலங்கை 70 பில்லியன் டொலர்களையே உருவாக்கியுள்ளது.

உலகில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களை மக்களின் வாழ்விலும், சமூக மாற்றத்திலும், பொருளாதார முன்னேற்றத்திலும் இணைக்கத் தவறிய தேசம் நாம். உலகம் வேகமாக நகரும் போது, நாமோ அதன் பின்னே ஆமை வேகத்தில் நகர்கின்றோம். எனவே, நமது நாட்டில் கிட்டத்தட்ட 54 வீத மக்கள் வறுமையில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

68 வீத மக்கள் போதிய உணவை உண்ண முடியாத நிலையில் உள்ளனர். மாதம் 10 கிலோ அரிசி வாங்க 34 லட்சம் குடும்பங்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்தப் பயணத்தை இப்படியே தொடரப் போகிறோமா? இல்லை, நாம் இதனை இதை மாற்றிக் காட்டுவோம். இதனை மாற்றும் துணிவும், நம்பிக்கையும் உள்ள மக்களின் கூட்டுதான் தேசிய மக்கள் சக்தி ஆகும். எனவே, தேசிய மக்கள் சக்தியை சுற்றி அணி திரள வருமாறு மக்களை அழைகின்றோம்” - என்று தெரிவித்தார். (ரென-06)

# மின்சார சபையினை மறுசீரமைப்பதற்கு அனுமதி வழங்க முடியாதென மறுப்பு!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி



தனிப்பட்ட தேவை கருதி மின்சாரசபையினை மறுசீரமைப்பதற்கு அனுமதி வழங்க முடியாது!, என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று சமர்ப்பிக்கப்பட்ட மின்சார சட்டமூலம் குறித்து உரையாற்றிய போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மின்சார சட்டமூலத்தில் பாரிய பிரச்சினைகள் காணப்படுவதை உயர்நீதிமன்றமும் சுட்டிக்காட்டியுள்ளது. அதனாலேயே மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகின்றது என அறிவித்துள்ளது.

உத்தேச மின்சாரபைச் சட்டமூலத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து உயர்நீதிமன்ம் முன்வைத்துள்ள பரிந்துரைகளை கருத்திற்கொள்ள வேண்டும். அதன்பின்னரே தீர்மானம் எடுக்க வேண்டும்.

அவரவரின் தனிப்பட்ட தேவை கருதி மின்சாரசபையினை மறுசீரமைப்பதற்கு அனுமதி வழங்க முடியாது, என்று உறுதிபடக் குறிப்பிட்டுள்ளார். (04)

# மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டமூலத்தின் பல சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை!

## உயர் நீதிமன்றத் தீர்ப்பு நாடாளுமன்றில்

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டமூலத்தின் பல சரத்துக்கள் அரசியலமைப்பிற்கு முரணானவை என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சார சட்டமூலத்திற்கு எதிரான மனு மீதான விசாரணை தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகரால் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இத்தீர்ப்பை வாசித்த சபாநாயகர்


2➤


# உத்தேச மின்சாரசபைச் சட்டமூலம் 6 ஆம் திகதி விவாதம் நடத்தப்படும்!

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர



உத்தேச மின்சாரசபை சட்டமூலம் தொடர்பாக 6 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட்டு, வாக்கெடுப்பும் முன்னெடுக்கப்படுமென மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சார சட்டமூலம் குறித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கும் போது, உத்தேச மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டமூலத்தில் காணப்படும் ஏற்பாடுகள் தொடர்பாக உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ள விடயங்களை எதிர்க்கட்சி தலைவர் தவறாக சித்தரிக்க முயற்சிக்கின்றார்.

திருத்தம் மேற்கொள்வதன் ஊடாக சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என்றே நீதிமன்றம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், உத்தேச மின்சாரசபை சட்டமூலம் தொடர்பாக 6 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதம் முன்னெடுக்கப்பட்டு வாக்கெடுப்பும் நடத்தப்படும், என்றார். (04)

# மக்கள் மீது அரசாங்கத்திற்கு புதுமையான கருணை ஏற்பட்டுள்ளது வடக்கு, கிழக்கு மக்களை திட்டங்களை காட்டி ஏமாற்ற முனைகிறது!

## எதிர்க்கட்சித் தலைவரின் ஆலோசனைக் குழு உறுப்பினர் தனவர்தன குருகே



தலைவரின் ஆலோசனைக் குழு உறுப்பினருமான கலாநிதி தனவர்தன குருகே தெரிவித்துள்ளார்.

மக்கள் மீதான இந்த திடீர் இரக்கம் முன்னமே இருந்திருந்தால், மக்கள் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க மாட்டார்கள். நம் நாட்டு மக்கள் பட்டினியால் வாடுவதையும், இன்று இளைஞர்கள் வேலையின்மையால் படும் வேதனையையும் ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவில்லை. அரச வளங்களைச் சூறையாடி ஊழலற்ற அரசை வழி நடத்துபவர்களை மீண்டும் அனுமதித்தால் நாடு எங்கே போய் நிற்கும் என்பதை சிந்தியுங்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எதிர்த்தரப்பு தலைவர் ஒருவருக்கு சவால் விடுத்துள்ளார். எதிர்க்கட்சி என்ற நிலையிலிருந்து, பாடசாலைகள், கல்வி மற்றும் சமூக மேம்பாட்டிற்காக தாம் ஆற்றிவரும் சேவைகளை தாண்டி, அதையும் விட மேலாக எதையாவது செய்து காட்டுங்கள் பார்க்கலாம் என அந்த எதிர்தரப்பு அரசியல் தலைவரை பார்த்து சஜித் பிரேமதாச சவால் விடுத்துள்ளார். அவர் அந்த சவாலை நிறைவேற்றிக் காட்டட்டும் பார்க்கலாம்.


2➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பிக்காத சிலரை பதில் அதிபர்களாக தெரிவு செய்தமை நியாயமா?

## உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

34 தேசிய பாடசாலைகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதுவரை நடைபெற்ற நேர்முகத்தேர்வில் அதிக சித்திகளைப் பெற்ற நான்கு அதிபர்களை மஹாநாம கல்லூரி, மொரட்டுவ வேல்ஸ் குமார மற்றும் குளியாப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு நியமிக்க உத்தரவிடுமாறு இலங்கை ஆசிரியர் சங்கமும் அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினும் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

சட்டத்தரணி நிலுகா திஸாநாயக்க மூலமாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, கல்வி அமைச்சின் செயலாளர், அரச சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட உறுப்பினர்கள், மேற்படி பாடசாலைகளில் கடமையாற்றும் பதில் அதிபர்கள் மற்றும் சட்டமா அதிபர் உட்பட 21 உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

34 தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்காக கடந்த ஜூலை மாதம் நான்கு நாட்களாக நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பிக்காத வேறொரு தேசிய பாடசாலையில் அதிபர் பதவியை வகித்த ஒருவர் ரோயல் கல்லூரியின் பதில் அதிபராகவும், இன்னும் மூவர் மேற்குறிப்பிட்ட மூன்று பாடசாலைகளின் பதில் அதிபர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளமை நியாயமற்றது என சட்டத்தரணி நிலுகா திஸாநாயக்க உச்ச நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

குறித்த நேர்முகத் தேர்வின் மூலம் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிகளுக்கு 30 பேர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்குறிப்பிட்ட நான்கு தேசிய பாடசாலைகளுக்கு அநீதியான முறையில் பதில் அதிபர்களை நியமித்தமையின் மூலம் கல்வி அமைச்சர் தலைமையிலான அதிகாரிகள் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக மனுதாரர்கள் உச்ச நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர். (ரென-09)

# உத்தேச பொருளாதார மாற்றுச் சட்டத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறுவது தவறான பிரச்சாரமாகும்

## முதலீட்டுச் சபை தொழிற்சங்கங்கள் கண்டனம்

உத்தேச பொருளாதார மாற்றுச் சட்டத்தில் உள்ள விடயங்களுக்கு இலங்கை முதலீட்டுச் சபையின் தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக சட்ட வரைவை உருவாக்க நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் மங்கள யாப்பா தெரிவித்திருந்த கருத்தை வன்மையாக நிராகரிப்பதாக இலங்கை முதலீட்டுச் சபையின் கூட்டு தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 31 ஆம் திகதி மங்கள யாப்பாவால் நடத்தப்பட்ட ஒன்லைன் ஊடான மாநாட்டிலேயே அவர் இந்த தவறான அறிக்கையை வெளியிட்டார் எனவும், இந்த தவறான அறிக்கை ஒரு தனிநபரால் வெளியிடப்பட்டது எனவும், அவ்வாறு செய்வது அச்சட்டத்தை உருவாக்க பங்களித்த அனைத்து தரப்பினரையும் அவமதிக்கும் செயலாகும் எனவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி சட்ட வரைபை தயாரித்த குழு, வரைபை தயாரிக்கும் போது தொழிற்சங்கங்களை ஒருபோதும் கலந்தாலோசிக்கவில்லை எனவும் தொழிற்சங்க கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரென-10)

# ஜனநாயகத்திற்கு விரோதமான சட்டமூலம்

## விமல் வீரவன்ஸ எம்.பி. குற்றச்சாட்டு!



அரசாங்கம் ஜனநாயகத்திற்கு விரோதமான சட்டமூலம் ஒன்றை முன்வைத்துள்ளது, என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்பட்ட மின்சார சட்டமூலம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசியலமைப்பின் சில ஏற்பாடுகளுக்கு குறித்த சட்டமூலம் முரணானது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரசாங்கம் ஜனநாயகத்திற்கு விரோதமான சட்டமூலம் ஒன்றை முன்வைத்துள்ளமையை இதன் ஊடாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, உத்தேச மின்சாரசபை சட்டமூலத்தில் உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள பரிந்துரைகளை கருத்திற்கொண்டு திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும், என்றார். (04)

# மின்சாரசபைச் சீர்திருத்தச் சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்!

## லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வலியுறுத்து



மின்சாரசபைச் சீர்திருத்தச் சட்டமூலத்தில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும், என எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சார சபைத் திருத்தச் சட்டமூலம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மின்சாரசபையினை 12 பிரிவுகளாக வகுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதனூடாக மின்சாரசபையை விற்பனை செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே உத்தேச மின்சாரசபை சட்டமூலம் மூலம் நிறைவேற்றப்படும் நடவடிக்கை தாமதப்படுத்தப்பட வேண்டும், என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார். (04)

## மக்கள் மீது அரசாங்கத்திற்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எத்தனை அவதூறுகளை பரப்பினாலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக வருவதை எவராலும் தடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரென-07)

## மின்சாரசபை மறுசீரமைப்புச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த யாபா அபேவர்தன, நாடாளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மற்றும் வாக்கெடுப்பு மூலம் மாத்திரமே சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என உயர்நீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி, குறித்த சரத்துக்கள் திருத்தப்பட்டால் சட்டமூலம் எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (04)








உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com




# கல்முனை கிரீன் பீல்டில் சுற்றாடல் பாதுகாப்பு வேலைத் திட்டம் இன்று

(அஸ்லம் எஸ்.மௌலானா)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கல்முனை கிரீன் பீல்ட் வீட்டுத் திட்டப் பகுதியில் கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த விசேட சுற்றாடல் பாதுகாப்பு வேலைத் திட்டம் இன்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் வடிகான்களும் குளக்கரைகளும் புறச்சூழல்களும் சுத்திகரிப்பு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் ஆலோசகருமான ஏ. கலீலுர் ரஹ்மான், மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம். பயாஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.அஹத், மேற்பார்வையாளர்களான எம். அத்ஹம், யூ.கே. காலிதீன், ஆர். லிங்கராஜா, கல்முனை பிரதேச செயலக சுற்றாடல் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.எம்.எம். அர்ஷாத், எம்.எம். றினா உள்ளிட்டோர் கலந்து கொண்டு இப்பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

இவ்வேலைத் திட்டத்திற்கு கல்முனை பிரதேச செயலகம், 'சமாதானம் மற்றும் சமூகப் பணி' நிறுவனம் என்பனவும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.

# மாணவர்களுக்கான முரண்பாடு முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை



(ஹஸ்பர் ஏ.எச்)

பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் முத்தமிழ் மாணவர் மன்றத்தில் உள்ள மாணவர்களுக்கான முரண்பாடு முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை இன்று திருக்கோணமலை மாநகர சபை நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 30 மாணவர்கள் பங்கு பற்றினர்.

அறிவு ஒளி மைய நிர்வாகச் செயலாளர் புகழ்வேந்தன் டிலக்ஷிகா, முத்தமிழ் மாணவர் மன்றப் பொதுச் செயலாளர் இளங்கோவன் ரிஷிகவி மற்றும் பொருளாளர் தினேஷ்குமார் சாத்விகா ஆகியோர்களது ஏற்பாட்டில், பணிப்பாளர் உதயகுமார் அஜித்குமார் ஆகியோர் இப்பயிற்சிப் பட்டறையை முன்னின்று நடத்தினர்.

இதன்போது நிர்வாகச் செயலாளர் புகழ்வேந்தன் டிலக்ஷிகா, மாணவர்களது ஆடைக் கலாசாரம் மற்றும் மன்றத்தின் நிதியின் முக்கியத்துவம் ஆகியன பற்றி சில அறிவுரைகளை வழங்கினார்.

# ஐ.நாவின் நிரந்திர வதிவிடப் பிரதிநிதிக்கு மலையகம் 200 முத்திரை வழங்கிய ஆளுநர்



(ஹஸ்பர் ஏ.எச்)

ஜெனிவாவிற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங் கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலகவைச் சந்தித்துள்ளார்.

இதன் போது, பெருந்தோட்ட சமூகத்தின் 200வது வருடத்தின் முதல் நினைவு முத்திரையை தொழில் அமைச்சின் செயலாளருடன் இணைந்து வழங்கி வைத்தார்.

# அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அமைச்சு மேலதிக செயலாளராக பதவியுயர்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பதவியுயர்வு வழங்கி, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபராக வி.ஜெகதீசன் பாரபட்சமின்றி சமமாக பணியாற்றியவராக அறியப்படுகிறார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள வி.ஜெகதீசன் நாளை புதன்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.




# மாவட்டத் திட்டமிடல் செயலகத்தினது திட்ட முன்மொழிவுக் கலந்துரையாடல்



கிளிநொச்சி மாவட்டத்தின் திட்டமிடல் செயலகத்தினால் மூன்றாண்டுத் திட்ட முன்மொழிவு கலந்துரையாடல் மாவட்டத் திறன் விருத்தி ஒன்று கூடல் மண்டபத்தில் பதில் அரசாங்க அதிபர் முரளிதரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல்கள், நடந்து முடிந்த அபிவிருத்தி திட்டங்கள், நடக்க இருக்கின்ற அபிவிருத்தி திட்டங்கள், மூன்று ஆண்டுக்கான விசேட வேலைத் திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பான திட்ட முன்மொழிவுகள் பகிரப்பட்டன.

இத்திட்ட முன்மொழிவுக் கலந்துரையாடலில் ஏனைய திணைக்கள அதிகாரிகள், மாவட்ட திட்டமிட செயலகத்தில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (02)



# ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கைக்குப் படுதோல்வி!

ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று இடம் பெற்ற முதல்சுற்று போட்டியொன்றில் இலங்கை அணியை 6 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா அணி வீழ்த்தியுள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

தென்னாபிரிக்க அணியின் அன்ட்ரிச் நோர்ட்ஜே 4 விக்கெட்டுகளையும், கேசவ் மகராஜ், ரபாடா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

அதனையடுத்து, 78 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 16.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பந்து வீச்சில் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக தென்னாபிரிக்க அணியின் அன்ட்ரிச் நோர்ட்ஜே தெரிவானார்.

# இந்திய நாடாளுமன்ற மக்களவைத்தேர்தல் பாஜகவுக்கு காங்கிரஸ் கடும் போட்டி

## அமித் ஷா சாதனை வெற்றியை நோக்கி!



542 இந்திய மக்களவைத் தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில், பிற்பகல் நிலவரப்படி பாஜக கூட்டணி 292 இடங்களிலும், இண்டியா கூட்டணி 232 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன. பிற கட்சிகள் 19 இடங்களில் முன்னிலை வகிக்கின்றன. இந்தப் போக்கு மத்தியில் மீண்டும் பாஜக ஆட்சி அமைக்கும் சூழல் உருவாக்கி வந்தாலும், கடும் நெருக்குதலுடன் கூடிய வெற்றியையே பெறும் என்பது தெரிகிறது.

இதற்கிடையில் இண்டியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அழைப்பு விடுத்துள்ளார். அதேபோல், இன்று மாலை பாஜகவும் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்துகிறது. பாஜகவுக்கு தனிப் பெரும்பான்மை இல்லாததால் தேசிய ஜனநாயக கூட்டணி அட்சி அமைக்க ஏதுவாக இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, எல்.கே.அத்வானி, வாஜ்பாய் வெற்றிபெற்ற தொகுதியான குஜராத் காந்தி நகரில் பா.ஜனதா சார்பில் களமிறங்கியுள்ள அமித் ஷா, 8 லட்சத்து 36 ஆயிரத்து 657 வாக்குகள் பெற்றுள்ளார்.

இதன்படி 6.36 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் பா.ஜனதா வேட்பாளர் அமித்ஷா தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார். அதேசமயம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் சோனல் படேல் 2,00,192 வாக்குகள் பெற்று பின்தங்கி உள்ளார்.

# இந்திய அணியின் பயிற்சியாளராக விரும்புகிறேன்! கௌதம் கம்பீர் அபுதாபியில் வைத்துத் தெரிவிப்பு




இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக விரும்புவதாக இந்திய அணியின் முன்னாள் வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பிசிசிஐ) மும்முரமாக செயல்பட்டு வருகிறது. இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணியின் தற்போதைய பயிற்சியாளராக ராகுல் டிராவிட் பணியாற்றி வருகிறார். அவரது பதவிக்காலம் கடந்த நவம்பர் மாதத்தோடு நிறைவுக்கு வந்தது. எனினும், ரி-20 உலகக் கிண்ணத்தைக் கருத்தில் கொண்டு ராகுல் டிராவிட்டின் பதவிக்காலம் மேலும் சில மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

அதன்படி ரி-20 உலகக் கிண்ணத் தொடருடன் டிராவிட்டின் பதவிக்காலம் முடிகிறது. இந்த நிலையில், நியூசிலாந்தின் ஸ்டீபன் பிளெமிங், அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொன்டிங் ஆகிய இருவரில் ஒருவரை இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக்க பிசிசிஐ முனைப்புக் காட்டி வருவதாகத் தகவல் வெளியாகியிருந்தது. ஆயினும், பிசிசிஐயின் செயலாளர் ஜெய் ஷா அதனை மறுத்திருந்தார்.

இதனிடையே இந்திய அணியின் முன்னாள் வீரரான கௌதம் கம்பீரையும் தலைமைப் பயிற்சியாளராக்க பிசிசிஐ அணுகியதாகத் தகவல் வெளியாகி இருந்தது. இந்த நிலையில், அபுதாபியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கௌதம் கம்பீர் பங்கேற்றார்.

அப்போது அவர் பயிற்சியாளர் பதவியை ஏற்பது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், 'இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக பணியாற்ற நான் விரும்புகிறேன். இந்திய அணிக்குப் பயிற்சி அளிப்பதைக் காட்டிலும் வேறெதுவும் சிறந்த கௌரவம் இருக்காது. 140 கோடி மக்களின் பிரதிநிதியாக இயங்க வேண்டி இருக்கும். இந்தியா உலகக் கிண்ணத்தை வெல்லும். அதற்கு அச்சமின்றி இருக்க வேண்டும்' என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக நடப்பு ஐபிஎல் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் ஆலோசகராக செயல்பட்டு வந்த கௌதம் கம்பீர், அந்த அணிக்கு மீண்டும் சம்பியன் பட்டம் வென்று கொடுப்பதில் முக்கிய பங்கினை வகித்திருந்தார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக விளையாடிய கௌதம் கம்பீர் 58 டெஸ்ட், 147 ஒருநாள் மற்றும் 38 ரி-20 சர்வதேசப் போட்டிகளில் விளையடி 10,000 த்திற்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)



# தமிழகத்தில் திமுக கூட்டணி முன்னிலை

இந்திய நாடாளுமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39 நாடாளுமன்ற தொகுதிகள் மற்றும் புதுச்சேரியில் உள்ள 1 தொகுதி என 40 நாடாளுமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் தி.மு.க. கூட்டணி முன்னிலையில் உள்ளது.

# சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு கிளி.இயக்கச்சியில் சிரமதானம்!





ஆண்டுதோறும் ஜூன் மாதம் 5ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதனை முன்னிட்டு மே 30ஆம் திகதி தொடக்கம் ஜூன் 5ஆம் திகதி வரையான ஒரு வார காலப் பகுதியில் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் அரசாங்கத்தினால் நாட்டின் பல பாகங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


இதன் ஒரு பகுதியாக நேற்றைய தினம் (3) கிளிநொச்சி இயக்கச்சி நகர்ப் பகுதி சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வு வடமாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் மகேஷ் ஜல்தோட்ட தலைமையில் நடைபெற்றது. "பயனுறுதி மிக்க நிலப் பயன்பாட் டின் ஊடாக நலம் நிறைந்த நாடு" எனும் தொனிப் பொருளில் இந் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது வடிகான்கள், வீதியோரங்கள் போன்ற இடங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகள் அகற்றி சுத்தப் படுத்தப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பிரதேச சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள், பாடசாலைச் சுற்றாடல் கழக மாணவர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (02)

## ஒரு வருடத்துக்கு முன்பே பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகிய மாணவி



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

றுவென்வெல்லை கன்னத்தோட்டையைச் சேர்ந்த பாத்திமா பஹ்மா என்ற மாணவி, ஒரு வருடத்துக்கு முன்பே க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளார்.

கேகாலை மாவட்டத்தின் கன்னத்தோட்டை சுலைமானியாக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் பயின்று வந்த பஹ்மா, அடுத்த வருடமே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருக்க வேண்டும். ஆனால், தனிப்பட்ட பரீச்சாத்தியாக ஒரு வருடத்துக்கு முன்பே இவர் பரீட்சையில் தோற்றினார்.

அண்மையில்வெளியான பரீட்சை முடிவுகளின்படி 2.0694 இஸட் ஸ்கோர் புள்ளிகளுடன் இவர், 2 ஏ, 1 பீ சித்தியைப் பெற்று மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகியுள்ளார். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையிலும் இவர், 9 ஏ சித்தி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆந்திராவில் தெலுங்குதேசம் கட்சி முன்னிலை சந்திரபாபு நாயுடுவுக்கு மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

இந்திய நாடாளுமன்ற தேர்தல் மற்றும் ஆந்திரா, ஒடிசா சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன. ஆந்திராவில் உள்ள மொத்த சட்டசபை தொகுதிகளின் எண்ணிக்கை 175 ஆகும். இதில் 88 இடங்களை வெல்லும் கட்சி ஆட்சியை பிடிக்கும்.

இந்த சூழலில் ஆந்திர சட்டசபை தொகுதிகளில் 175 இல் 158 இடங்களில் தெலுங்குதேசம் கட்சி முன்னிலை வகிக்கிறது. மேலும் கூட்டணி இல்லாமல் தனித்து 131 தொகுதிகளில் தெலுங்குதேசம் கட்சி முன்னிலை வகிக்கிறது. தேவையான இடங்களுக்கு மேல் தெலுங்குதேசம் முன்னிலையில் இருப்பதால் அக்கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு முதலமைச்சர் ஆவது உறுதியாகி உள்ளது.

இந்நிலையில் ஆந்திராவில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அமோக வெற்றி பெற்றுள்ள தெலுங்கு தேசம் கட்சி (டிடிபி) தலைவர் சந்திரபாபு நாயுடுவுக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், 'ஆந்திர சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தெலுங்கு தேசம் கட்சி (டிடிபி) தலைவர் சந்திரபாபு நாயுடு அவர்களுக்கு வாழ்த்துகள்.

தங்களது தலைமை ஆந்திரத்துக்கு வளத்தையும் வளர்ச்சியையும் தந்து, அம்மாநில மக்களின் கனவுகளையும் நம்பிக்கையையும் நிறைவேற்றட்டும்', என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உயர்தரத்தில் மூன்று 'ஏ' சித்தி பெற்ற பார்வையற்ற மாணவி



(எம்.எம்.ஜெஸ்மின்)

குருநாகல் பிதுர்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஹிமாஷா கவிந்தி ஹேரத் என்ற பார்வையற்ற மாணவி 2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் மூன்று 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளார்.

இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த போதிலும், தனிப்பட்ட விண்ணப்பதாரராக இவர் கடந்த வருடமே பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்.

பொருளாதாரம், தர்க்கம், அரசியல் அறிவியல் ஆகிய மூன்று பாடங்களிலும் அவர் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

குருநாகல் மஹிந்த மகா வித்தியாலயத்திலிருந்து 2021ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய ஹிமாஷா ஒன்பது பாடங்களிலும் சித்தியடைந்திருந்தார்.

2018ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான பாட்டுப் போட்டியில், நாடளாவிய ரீதியில் இவர. முதலாவது இடத்தைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



# மருத்துவராக அடையாளப்படுத்தி மோசடிகள் சுன்னாகத்தை சேர்ந்தவர் பொலிசாரால் கைது!




போலி ஆவணங்களை உருவாக்கிக் காண்பித்து, மருத்துவர் என அறிமுகப்படுத்தி, கனடாவில் உள்ள ஒருவரிடம் ஒரு கோடியே 42 லட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோஜன் தலைமையிலான பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம், சுன்னாகத்தைச் சேர்ந்தவர் என்றும், 29 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதிசொகுசு கார் ஒன்றும், 15 பவுண் நகைகளும், 5 லட்சம் ரூபா பணமும், 5 கைபேசிகளும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர், தான் ஒரு மருத்துவர் என்பதைக் காண் பிப்பதற்காக போலி ஆவணங்களையும், அடையாள அட்டையையும் உருவாக்கியுள்ளார். அவற்றைக் கொண்டே அவர் மோசடிகளை மேற்கொண்டுள்ளார்.

கனடாவில் உள்ள ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டுள்ள இவர், மருத்துவ மேற்படிப்புக்காக புலமைப்பரிசில் கிடைத்துள்ளது என்றும், அதனால் வெளிநாடு செல்லவுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் காணி ஒன்று தனக்கு உள்ளது என்று தெரிவித்து அதற்குரிய ஆவணங்களையும் அனுப்பியதுடன், அதை ஒரு கோடியே 42 லட்சத்துக்கு விலையும் பேசியிருக்கின்றார். அதை நம்பி கனடாவில் இருந்து உண்டியல் மூலமும், வங்கிக் கணக்கு ஊடாகவும் ஒரு கோடியே 42 லட்சம் ரூபா கைமாறியுள்ளது.

பின்னர் இவர் அனுப்பிய காணி ஆவணங்கள் போலியானவை என்பதை அறிந்துகொண்ட கனடா தரப்பு இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தது.

அதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோஜன் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், சந்தேகநபர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நடமாடுவதை அறிந்துகொண்ட யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான அதிசொகுசுக் காருடன் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடம் இருந்து கைச்செலவுக்காக வைத்திருந்த ஐந்து லட்சம் ரூபா பணமும், அவர் அணிய வைத்திருந்த 15 பவுண் நகைகளும், 5 கைபேசிகளும், வங்கி அட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் தன்னை மருத்துவர் என்று அடையாளப்படுத்திக் கொண்டு பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. ஏழை மக்களுக்கு இலவச மருத்துவ சேவை மேற்கொள்கின்றேன் என்று தெரிவித்து வெளிநாடுகளில் உள்ள பலரிடம் பணம் பெற்றுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

சந்தேகநபரால் பலகோடி ரூபா மோசடி செய்யப்பட்டிருக்கலாம் என்றும், விசாரணைகளில் மேலதிக விடயங்கள் வெளிவரலாம் என்றும் நம்பப்படுகின்றது. (01)

# வட மாகாண அரச சாரதிகள் தொடர் போராட்டத்தில்!

வட மாகாண அரசு சாரதிகள் சங்கம், யாழ் கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலகம் முன்பாக பந்தல் அமைத்து தொடர் போராட்டத்தை இன்றும் முன்னெடுத்தது.

வடக்கு மாகாணத்தில் 5 வருடங்களாக தடைப்பட்டிருந்த சாரதிகளுக்கான இடமாற்றத்திற்கு பிரதிப் பிரதம செயலரால், கடந்த வருடம் விண்ணப்பம் கோரப்பட்டு இடமாற்ற பட்டியலும் வெளியிடப்பட்டிருந்தது.

ஆளுநரின் கோரிக்கை அமைய பின்னர் அந்த இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் ஏமாற்றம் அடைந்த அரச சாரதிகள் கடந்த பெப்ரவரி மாதத்தில் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்தனர். அதனைத் தொடர்ந்து இடை நிறுத்தப்பட்ட இடமாற்றம், ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என பிரதி பிரதமர் செயலர் எழுத்து மூலம் உறுதிமொழி வழங்கி இருந்தார். குறித்த திகதி வரை இடமாற்றம் நடைமுறைப் படுத்தப்படாத நிலையில், அரச சாரதிகள் சங்கம் 7 ஆம் திகதி வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என அரச சாரதிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நேற்று காலையில் ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட அரச சாரதிகள் சங்கம், ஆளுநருக்கான மகஜரை அவரின் பிரதிநிதியிடம் கையளித்ததுடன் கைதடியில் அமைந்துள்ள பிரதமர் செயலர் அலுவலகம் முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (01)








## மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிய பரிசளிப்பு விழா



(நூருல ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மருதமுனை கமு.கமு.ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் புனித ரமழான் மாதத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற இஸ்லாமிய போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை அதிபரும், பழைய மாணவர் சங்கத் தலைவருமான எம்.எம் ஹிர்பகான் தலைமையில் ஷம்ஸ் மத்திய கல்லூரி திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

மேலும் இந்நிகழ்ச்சிக்கு கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளர் எம்.எப். ஹிபதுல் கரீம், கிழக்கு பல்கலைக் கழகப் பதிவாளர் எம்.எம்.மர்சூக், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர், மட்டக்களப்பு மத்திய கல்வி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம் அமீர், அல் ஹிக்மா ஜுனியர் வித்தியாலய அதிபர் எம்.எல்.எம் மஹ்ரூப், ஆசிய பௌண்டேசனின் நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம் வலீத், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான எம். எஸ் உமர் அலி, பீ எம்.சிபான், நாடாளு மன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் சப்றாஸ் நிலாம் உட்பட கல்வியாளர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியில் அல்குர்ஆன் ஓதும் போட்டி மற்றும் அரபு எழுத்தணி போட்டி போன்றவற்றில் வெற்றி பெற்றவர்களும் கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கண்டாவளை உழவனூரில் உ.தர மாணவிகளிருவர் மருத்துவத்துறைக்கு!



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட உழவனூர் பகுதியில் சகோதரிகள் இருவர் விசேட சித்தி பெற்று வைத்தியதுறைக்குத் தெரிவாகியுள்ளனர்.

பின்தங்கிய கிராம்மான உழவனூர் பகுதியில் அடிப்படை வசதிகளின்றி வறுமையான சூழ்நிலையிலும் தனது தந்தையின் தனி உழைப்பை மட்டும் வைத்து, தமது கல்வியை தொடர்ந்து வெற்றிபெற்றுள்ளனர்.

குறித்த மாணவிகளின் தந்தை லொத்தர் சீட்டுக்கள் விற்பவராவார். அவரது தனி வருமானத்தை கொண்டு தம்மை கல்வி பயில வைத்ததாகவும் நீண்ட தூரம் சென்று தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் மாணவிகள் தெரிவித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.06.2024 இல் வெளியிடப்பெற்றது.